BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

E - ISSN: 3139 -1893 An international open access, peer- reviewed, refereed journal

# சங்க இலக்கியங்கள் சுட்டும் கைம்பெண்களின் நிலை

முனைவர் இரா. நாகராணி

இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை, ஸ்ரீ ஷங்கர்லால் சுந்தர்பாய் ஷசுன் ஜெயின் மகளிர் கல்லூரி, தி.நகர், சென்னை – 17, மின்னஞ்சல் : naguram.ram@gmail.com கைபேசி எண்: 9884314892

**ஆய்வுச் சுருக்கம்**

அன்னை, ஆறு, நாடு ஆகியவற்றிற்கெல்லாம் பெண்மையை முதன்மைப்படுத்தியது சமுதாயம். தாய்வழி சமுதாயம் வழுவி ஆணாதிக்கச் சமுதாயமாக மாறியபோது மகளிர்க்குப் பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. அக்கட்டுப்பாடுகளில் ஒன்றுதான் கைம்மை நோன்பு என்ற அவல நிலை. இந்த அவல நிலையை சங்க இலக்கியங்கள் எத்தன்மையில் கண்ணுற்றது என்பதை முதன்மை நோக்கமாகக் கொண்டு இந்த ஆய்வு அமைகிறது.

**திறவுச் சொற்கள்**

சங்க இலக்கியங்கள், கைம்பெண், கைம்பெண் நிலைகள், சமுதாய கண்ணோட்டம்.

**ஆய்வு முன்னுரை**

தமிழர்களின் பொற்காலம் எனக் கருதப்படுகின்ற சங்க காலத்தில் பெண்கள் உயர்வுடையவர்களாக இருந்திருக்கின்றனர். பெண்கள் பல துறைகளில் தலைசிறந்து விளங்கினர். கல்வி மற்றும் அரசியலில் போற்றப்பட்டாலும், கணவனை இழந்த பெண்களின் வாழ்க்கை மட்டும் மிகவும் துயரமானதாகவும், கடுமையான தியாகங்கள் நிறைந்ததாகவும் இருந்ததை சங்க இலக்கியங்கள் பதிவு செய்திருக்கின்றன. ஆண்களுக்கு நிகரான சம உரிமை படைத்தவர்களாக இருந்தாலும் சமுதாயத்தில் கைம்பெண்கள் மனதளவில் பாதிப்புக்குள்ளாகினர். அவர்களுடைய சொல்லொண்ணா துயரங்களை வடிப்பதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

**சங்க காலத்தில் கைம்பெண்களுக்குச் சூட்டப்பட்ட பெயர்கள்**

கணவனை இழந்து வாடும் கைம்பெண்களைப் பின்வருமாறு சங்க இலக்கியங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

- ஆளில் பெண்டிர்
- தொடி கழி மகளிர்
- கழிகல பெண்டிர்
- கழிகல முகடு
- படிவ மகளிர்
- உயவல் பெண்டிர்
- பருத்திப் பெண்டிர்

(பா. இறையரசன், தமிழர் நாகரிக வரலாறு, ப.212)

என்ற பெயர்களில் வழங்கியுள்ளமையை நற்றிணையும் புறநானூறும் பதிவு செய்துள்ளன. நெசவுத் தொழிலை செய்த விதவைப் பெண்கள் பருத்திப் பெண்டிர் என்றழைக்கப்பட்டனர். விதவைப் பெண்கள் பிழைக்க வழி வகுத்தது போல் பெருமையுடன் பதிவு செய்துள்ளது நமது தமிழ்ச் சமுதாயம்.

**கைம்பெண் நிலை**

சங்ககாலப் பெண்கள் திருமணம் முடிந்த பிறகு பிறந்த வீட்டில் பெற்றோருடன் வாழவில்லை. கணவனுடன் இணைந்து இன்ப வாழ்வு வாழ்ந்தனர்.

*“வினையே ஆடவர்க்கு உயிரே வாணுதல்*
*மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர்”*

*(குறுந்தொகை, பா.135)*

என்ற நிலைப்பாட்டில் பழங்காலத்தில் பெண்கள் வாழ்ந்துள்ளனர். மணந்த மணாளனை இழந்த பெண்கள் கைம்பெண்கள் என்று அழைக்கப்பட்டனர்.

இப்பெண்கள் கைம்மை நோன்பு நோற்று தமது வாழ்க்கையைக் கழித்தனர் என்று சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. கைம்மை நோன்பின் கொடுமையைக் கண்ணுற்ற கடுந்தோட் கரவீரனார் என்ற புலவர்,

*"கருங்கண் தாக்கலை பெரும் பிறிது உற்றனக்*
*கைம்மை உய்யாக் காமர் மந்தி*
*கல்லா வன்பறழ் கிளை முதல் சேர்த்தி*
*ஓங்கு வரை அடுக்கத்துப் பாய்ந்து உயிர் செகுக்கும்"*

*(குறுந்தொகை,பா.69)*

கரிய கண்ணையுடைய தாவித் திரியும் ஆண் குரங்கு(கடுவன்)இறந்தது. அதனால் கைம்மை நிலை கொண்டு வாழ்வதை விரும்பாத பெண் குரங்கு (மந்தி), இன்னும் மரத்துக்கு மரம் தாவக் கூட கற்றுக்கொள்ளாத தன் சிறு குட்டியை(பறழ்) தன் உறவினரிடம் ஒப்படைத்துவிட்டு ஓங்கி உயர்ந்த மலை உச்சியிலிருந்து பாய்ந்து உயிர் துறந்தது என்று கூறுகின்றார். அன்றைய காலகட்டத்தில் கணவனை இழந்த பெண்கள் படும் துயரத்தை சமுதாயத்தில் உள்ள மக்கள் உணர வேண்டும்; விழிப்புணர்வு கொள்ளவேண்டும் என்ற நோக்கில் புலவர் இப்பாடலை புனைந்துள்ளார். சமுதாய அவலத்தை, கைம்மை நோன்பின் துன்பியலை ஆண், பெண் குரங்குகளைக் கொண்டு சித்தரித்துள்ளார்.

கடுமையான நோன்பின் காரணமாகத் தான் கணவன் இறந்த பின்னர் உயிர் வாழ பெண்கள் விரும்பவில்லை. கணவனுடன் சேர்ந்து தங்கள் உயிரைத் துறந்துள்ளனர் என்று ஊகிக்க முடிகின்றது. இதனை பூதப்பாண்டியன் மனைவியின் கூற்றின் மூலம் அறிந்து கொள்ளமுடிகிறது. பூதப்பாண்டியன் இறந்தான். அவனது மனைவி பெருங்கோப்பெண்டு பெருந்துயருற்றாள். தன் கணவன் இறந்த பின்னர் உயிர்வாழ்வதா? என்று கருதி தீப்பாய்ந்து உயிர்விடத் துணிந்தாள். அப்போது கைம்மைத் துயர் எத்தன்மையது என்பதை,

*“அணில்வரிக் கொடுங்காய் வாள்போழ்ந்திட்ட*
*காழ்போல் நல்விளர் நறுநெய் தீண்டாது*
*அடைஇடைக் கிடந்த கைபிழி பண்டம்*
*வெள்ளட் சாந்தொடு புளிப்பெய்து அட்ட*
*வேளை வெந்தை வல்சி ஆக*
*பரற் பெய்பள்ளிப் பாய்இன்று வதியும்*
*உயவல் பெண்டிரேம் அல்லேம்மாதோ*
*பெருங்காட்டுப் பண்ணிய கருங்கோட்டு ஈமம்*
*நுமக்கு அரிதாகுகதில்ல. எமக்கு எம்*
*பெருந்தோட் கணவன் மாய்ந்தென’*

*(புறநானூறு, பா.246)*

என்று எடுத்துரைக்கின்றாள். பண்பில் மேம்பட்ட சான்றவர்களே! “போகாதே” என்று சொல்லி என் கணவனுடன் நான் செல்வதைச் சூழ்ந்துகொண்டு தடுக்கும் பொல்லாத சான்றோரே!

- நெய் சேர்க்காமல், அரிந்த வெள்ளரிக்காய் விதை போல் தோன்றும் கைப்பிடி அளவு அரிசியை இலையில் இட்டு
- வெள்ளை-எள் சாந்து சேர்த்துப் புளி ஊற்றி வெந்த சோற்றை மட்டும் உண்டுகொண்டும்,
- பரப்பிய பரல்-கற்களைப் பாயாக்கிப் படுத்துக்கொண்டும்
- வாழும் ‘உயவல் பெண்டிர்’ (உய்ய-வல்ல-பெண்டிர்) நான் இல்லை.

எல்லாருக்கும் இடம் கொடுக்கும் பெருங்காட்டில் என் பெருந்தோளில் இன்பம் தந்த கணவன் மாய்ந்து எரியும் ஈமத் தீ உங்களுக்கு நெருங்குவதற்கு அரிதாக இருக்கட்டும். எனக்கு அது அரும்பே இல்லாமல் முழுதுமாக மலர்ந்திருக்கும் குளுமையான தாமரைப் பொய்கையும், ஈமத் தீயும் ஒன்றுதான். நான் ஈமத் தாமரையில் குளிக்கிறேன் என்று கூறி உயிரை மாய்க்கிறாள்.

பாயின்றிப் படுத்தல், கையைத் தலையணையாக வைத்துக் கொள்ளல், வெள்ளை எள் சேர்த்த புளி சோற்றை உண்ணல், உப்பில்லா வேளைக் கிரை உணவை உண்ணல் எனப் பல்வேறு துன்பங்களைக் கைம்பெண்கள் அனுபவித்துள்ளனர். இக்கொடியநிலையில் தன்னால் வாழ இயலாது என்பதை பூதப்பாண்டியன் மனைவி பெருங்கோப்பெண்டின் பாடல் தெளிவுறுத்துகின்றது. அரசி முதல் சாதாரண நிலையில் உள்ள பெண்களுக்கும் கைம்மை விரதம் பெரும் துன்பத்திற்கு உரியதாகவே இருந்திருக்கின்றது. இந்நிலை மாறவேண்டும் என்ற நோக்கில் தான் இப்பாடல் பாடப்பட்டுள்ளது என்பதை உணரமுடிகின்றது.

**கைம்மை நோன்பின் கொடிய நிலை**

கணவன் இருந்தபோது இன்பமுடன் வாழ்ந்த பெண்கள் கணவன் இறந்த பின்னர் அனைத்து இன்பங்களையும் துறந்து வாழ்ந்தனர். இன்பநிலையை இழந்த பெண்கள் மூன்று விதமான துன்பத்திற்கு ஆட்பட்டுள்ளனர். அவை,

1. ஒப்பனை களைதல்
2. நல் உணவு நிக்குதல்
3. பழக்க வழக்கம் நீக்கல்

என மூன்று வகையான துன்பத்திற்கு ஆளாகியுள்ளனர்.

**1. ஒப்பனை களைதல்**

பழங்காலத்தில் கணவனை இழந்த பெண்கள், தங்களை ஒப்பனை செய்து கொள்ளக்கூடாது. அழகிழந்து காணப்பட வேண்டும். கணவனை இழந்து வாழும் பெண்கள் மங்கலப் பொருள்களை நீக்கி வாழ வேண்டும்

- வளையல்கள் களைதல்
- அணிகலன்கள் களைதல்
- கூந்தல் ஒப்பனை களைதல்

போன்ற கட்டுப்பாடுகளைக் கைம்பெண்களுக்கு சமுதாயம் விதித்திருந்தது.

*“வாழைப் பூவின் வளைமுறி சிதற”*

*(புறம்., 237:10-12)*

*“தொடிகழி மகளிரின் தொல்கவின் வாடி”*

*(புறம்., 238:5-7)*

என்ற புறநானூற்றுப் பாடல் வரிகள் கணவனை இழந்த பெண்கள் வளையல்கள் அணியக்கூடாது என்ற காட்சியைப் புலப்படுத்துகின்றன. வெளிமான் என்ற மன்னன் இறக்க அவனுடைய உரிமை மகளிர் தங்கள் கைகளில் அணிந்திருந்த வளையல்களை உடைத்தெறிந்தனர். இதனால் அவர்களது கைகளின் அழகு குறைந்து பார்ப்பதற்கு வெறுமையாகக் காட்சியளித்தன என்று பெருஞ்சித்திரனார் குறிப்பிடுகின்றார்.

**அணிகலன்கள் களைதல்**

மணாளனுடன் வாழும் மங்கையே பல்வேறு அணிகலன்களை அணிந்து அழகுடன் மிளிர வேண்டும். கணவனை இழந்த மகளிர் அணிகலன்களை அணிதல் கூடாது. அதனைத் துறக்கவேண்டும். கரிகால் பெருவளத்தான் மறைந்தான். அவனால் ஆதரிக்கப்பெற்ற அனைவரும் வருந்தினர். அவனது உரிமை மகளிர் தாங்கள் அணிந்திருந்த அனைத்து அணிகலன்களையும் களைந்து பெருந் துயருற்றனர். இதனை அவனது இறப்பினைக் கண்டு கலங்கிய கருங்குழலாதனார் எனும் புலவர்,

*“பூ வாட் கோவலர் பூவுடன் உதிரக்*
*கொய்து கட்டுஅழித்த வேங்கையின்*
*மெல்லியல் மகளிரும் இழை களைந்தனரே*

*(புறம்., 224:15-17)*

என்று பாடுகின்றார். அன்றைய சமுதாயத்திலிருந்த அனைத்துத்தரப்பட்ட கைம்பெண்களுக்கும் வகுக்கப்பட்ட வரையறையாகும்.

**கூந்தல் களைதல்**

மங்கைக்கு கூடுதல் அழகினைத் தருவது கூந்தல். அதை மயிலின் தோகைக்கும் கார்மேகத்திற்கும் ஒப்பிட்டுக் கூறுவர். கூந்தலை அகிற்புகையூட்டியும் வாசனைத் திரவியங்களைப் பூசியும் அழகுபடுத்துவர். மிகச் சிறப்பாக ஒப்பனை செய்து அழகுபடுத்துவர். இதனை ஐம்பால், சில்லைங் கூந்தல் என்றெல்லாம் சங்க இலக்கியங்கள் வருணிக்கின்றன. இவையனைத்தும் கணவர் உயிருடன் இருக்கின்ற காலம் வரையில் அழகுப்படுத்திக் கொள்ளலாம். கணவர் இறந்தபின்னர் திரவியங்களால் பெண்கள் தம் கூந்தலை அழகுபடுத்துவதில்லை. மாறாகக் கூந்தலை குறைத்துக் கொண்டிருக்கின்றனர்.

பெண்களுக்கு அழகு தருவது கூந்தல். அக்கூந்தலிலேதான் பெண்கள் மலரணிந்து மகிழ்ந்தனர். கணவன் இறந்து படவே தமக்கு அழகு தந்த கூந்தலைப் பெண்கள் களைந்தார்கள். பாண்டியன் தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனைக் கல்லாடனார் பாடியபோது,

*“மெய்ம் மறந்து பட்ட வரையாப் பூசல்*
*ஒள்நுதல் மகளிர் கைம்மைகூர*
*அவிர் அறல் கடுக்கும் அம்மென்*
*குவை இருங் கூந்தல் கொய்தல் கண்டே”*

*(புறம். 25:10-14)*

கைம்மை பெண்கள் தம் கூந்தலை நீக்கிய செய்தியைப் புறநானூற்றில் நான்கு பாடல்கள் எடுத்து இயம்புகின்றன(புறம். 25, 250, 261, 280). திருமணத்திற்கு முன்பும், திருமணநிலையிலும், பெண்கள் பூச்சூடியிருக்கின்றனர்.

கைம்மையில் கூந்தல் நீக்கத்துடன் மலர் நீக்கமும் இயல்பாகவே நிகழ்ந்துள்ளது. இது பழந்தமிழகத்தின் சமுதாய நிலையையும் பெண்களின் பெருந்துயரையும் விளக்குவதாக உள்ளது.

## 2. நல் உணவு நீக்குதல்

தாளிப்புடன் கூடிய நல்ல கொழுவிய சுவையுடனான அடிசிலைத் தவிர்த்து நறு நெய்யின்றி நீர்ச்சோற்றையும் புளிகூட்டப்பட்ட வேளைக் கீரையினையும் உணவாகக் கொண்டிருக்கின்றனர். இன்னும் சிலர் அவ்விடத்து உண்டான புல்லரிசியினையே தம் உணவாக உட்கொண்டனர்.

*"குய்குரல் மலிந்த கொழுந்துவை அடிசில்*
*இரவலர்த் தடுத்த வாயில், புரவலர்*
*கண்ணீர்த் தடுத்த தண்நறும் பந்தர்*
*கூந்தல் கொய்து குறுந்தொடி நீக்கி*
*அல்லி உணவின் மனைவியொடு இனியே*
*புல்லென்றனையால் வளம் கெழுதிருநகர்*
*வான்சோறு கொண்டு தீம்பால் வேண்டும்*
*முனிந்தலைப் புதல்வர் தந்தை*
*தனித்தலைப் பெருங்காடு முன்னிய"*

*(புறம். 250:3-4)*

என்ற தாயங்கண்ணியாரின் பாடல் தெளிவுறுத்துகின்றது.

நீர்ச்சோறோ, புல்லரிசிச்சோறோ எதுவாயினும் அதனை கணவனை இழந்த மகளிர் முறையான நேரத்தில் உண்டார்களா? எனில் இல்லை எனலாம். நேரந்தவறி உண்ணும் நிலை கணவனை இழந்த பிறகே உருவாக்கப் பட்டிருக்கின்றது.

*"பெருவளக் கொழுநன் மாய்ந்தெனப்,*
*பொழுது மறுத்து,*
*இன்னா வைகல் உண்ணும்*
*அல்லிப் படுஉம் புல் ஆயினவே"*

*(புறநானூறு, பா. 248)*

என்று ஒக்கூர் மாசாத்தனார் கணவனை இழந்த பெண்ணொருத்தியின் நிலையினை எடுத்துக் காட்டுகின்றார். அறுசுவை உணவு என்பது கைம்பெண்களுக்கு மறுக்கப்பட்ட தண்டனையாகும். இதே சூழல் மனைவியை இழந்த ஆணிற்கு சுவை உணவு மறுக்கப்பட்டதாக எவ்வித சான்றும் இல்லை.

## 3. பழக்க வழக்கம் நீக்கல்

கணவனை இழந்த பெண்களின் நடை, உடை பாவனைகளில் பல மாற்றங்களை இச்சமுதாயம் உருவாக்கியது. அம்மாற்றங்கள் யாதெனின்,

- நல்ல ஆடை, அணிகலன்கள் அணிய தடை
- கூந்தலை அலங்கரிக்கத் தடை
- கூந்தலில் பூச்சூட தடை
- தனியாக வெளியில் சென்றுவரத் தடை
- சுவை உணவிற்குத் தடை
- மங்கல நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளத் தடை
- நெற்றியில் திலகமிட்டுக் கொள்ளத் தடை
- மூலையில் முடங்கிக் கிடத்தல்

எனப் பல்வேறு தடைகளையும் மாற்றங்களையும் சமுதாயம் கைம்பெண்களுக்கு விதித்துள்ளது.

*"எனை மணந்தார் இறந்தார், என் குற்றமல்ல;*
*இறந்தவுடன் மங்கல நாண் நல்லாடைகள்*
*புனைமலர் குங்கும அணிகள் போவதுண்டு*
*பொன்னுடலும் இன்னுயிரும் போனதுண்டே"*

*(பாரதிதாசன் கவிதைகள், தொகுதி – 1, பக். 73 – 74)*

என்று பாரதிதாசன் கைம்பெண் கொடுமைகளை எடுத்துரைத்துள்ளார். இந்நிலை மாற வேண்டுமெனில் "மரபுகளை உடைப்பது மட்டும் புதுமையல்ல. பழைய மரபுகளை உடைக்க வேண்டுமென்றால், அதைக்காட்டிலும் ஓர் அழகான நன்மையை, மேன்மையைக் காட்டினால்தான் மரபுகளை உடைத்தெறிந்த பலன் முழுமையாகக் கிடைக்கிறது" என மானுடத்தின் மகரந்தங்கள் என்ற நூலின் முன்னுரையில் இராஜம் கிருஷ்ணன் குறிப்பிடுவதைப் போன்று ஓரளவு இக்கொடுமைகளிலிருந்து விடுபட முடியும். பாரதிதாசன் போன்ற விழிப்புணர்வு இயக்கவாதிகளால் கைம்பெண் கோலம் என்ற கட்டுகளிலிருந்து இன்றைய பெண்கள் விடுபட முடிந்தது.

சங்க காலத்தில் அவ்வையார், அள்ளூர் நன்முல்லையார், ஆதி மந்தியார், ஒக்கூர் மாசாத்தியார், காக்கைப்பாடினியார் (நச்செள்ளையார்), நக்கண்ணையார், பூங்கணுத்திரையார், வெண்ணிக் குயத்தியார் என 150க்கும் மேற்பட்ட பெண்பாற் புலவர்கள் வாழ்ந்திருக்கின்றனர். ஆண்களுக்கு நிகராக விளங்கினர்.

மன்னன் தவறு செய்தவழி இடித்துரைத்துள்ளனர். ஆயினும், கைம்பெண் கொடுமையை அவர்களும் அனுபவித்திருக்கக் கூடும். ஆண்களுக்கு நிகரான ஆற்றலைப் பெற்றிருப்பினும் சமுதாயம் கொடுத்த கைம்பெண் என்ற தளையிலிருந்து விடுபடவில்லை.

கைம்பெண் கொடுமையை எதிர்க்கவும், விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் தான் சங்க காலப் புலவர்கள், தங்கள் கருத்துக்களைப் பாடல்கள் மூலம் பதிவு செய்துள்ளனர் எனலாம். ஒரு படைப்பாளன் சமுதாயத்திற்குத் தம்மால் முடிந்த கருத்தை மக்களுக்குக் கொண்டுசெல்லும் நோக்கில் நல்ல பல சிந்தனைகளை முன்வைப்பவராக விளங்குவான். அந்த நோக்கில் தான் சங்க காலப் புலவர்களும் செயல்பட்டுள்ளனர் என்பதை உணரமுடிகின்றது. இந்தப் பாடல்களைப் படிப்பதன் மூலம் இச்சமுதாயம் மாறாதா? என்ற எண்ண ஓட்டத்தில் படைத்திருக்கலாம். சங்க இலக்கியங்களில் நற்றிணையும் புறநானூறு மட்டுமே கைம்பெண் பற்றிய கருத்துக்களைப் பதிவு செய்துள்ளன.

**ஆய்வு முடிவுரை**

தமிழ் சமுதாயத்தில் கணவனை இழந்த மகளிர் விதவை என்றழைக்கப்பட்டனர். விதவை என்பதில் கூட பொட்டு (புள்ளி) இல்லை என்றனர். ஆனால் கைம்பெண் எனக் கூறுகின்றபோது இரு பொட்டு இருக்கின்றது என்ற கூற்று ஆறுதல் உடையாதாக உள்ளது. கணவன் இறந்த பிறகு பெண்கள் வாழும் நெறி கடுமையான விதிகளுக்கு உட்பட்டதாய் இருந்திருக்கின்றது. காலப்போக்கில் முழுமையான மாற்றத்தினை அடைந்திருக்கின்றது. இருப்பனும் முற்றிலுமாக மாறிவிடவில்லை. சங்க காலத்தில் கைம்பெண்நோன்பு பெண்ணிற்கு ஆறுதல் அளிப்பதாக அமையவில்லை.

தாய்வழிச் சமுதாயத்திலிருந்து ஆணாதிக்கச் சமுதாயமாக மாறத் தொடங்கியதும் பெண்களுக்குக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. அன்பு, அரவணைப்பு என்ற எதுவும் இன்றி பெண்கள் தங்கள் வாழ்நாளைக் கழித்துள்ளனர். ஆணாதிக்கச் சமுதாயத்தை எதிர்த்து பெண்ணால் தனித்து இயங்க முடியவில்லை. ஆணையே சார்ந்தவளாகக் கட்டமைக்கப்பட்டாள். கைம்மை நோன்பை கடைபிடிக்க முடியாது என்ற நிலைக்கு வந்தபோது உடன்கட்டை ஏறுகின்றாள். தங்களது எதிர்ப்பினைத் தெரிவிக்கும் கருவியாக உடன்கட்டை ஏறுவதை பயன்படுத்தி உள்ளனர். மனைவி இறந்தவுடன் கணவன் கைம்பெண் போல் வாழவேண்டும் என்ற கோட்பாட்டை வரையறுக்கவில்லை. ஆனால், நம் சமுதாயம் மதில்மேல் பூனையாக வாழும் நிலைப்பாட்டை கைம்பெண்களுக்கு உருவாக்கியுள்ளது என்பதை மறுக்கமுடியாது.

ஒரு கை தட்டினால் ஓசை வராது. இரு கையை சேர்த்துத் தட்டினால் தான் ஓசை வரும். அதைப்போல, கைம்பெண் மறுமணம் என்பது ஆணும் பெண்ணும் மனம் ஒப்ப நிகழவேண்டும். சமுதாய கட்டுகளுக்குத் தலைவணங்கி ஒதுங்கிப்போகும் பெண்ணினத்தின் நாடத்துடிபபினை உணர்ந்து தந்தை பெரியார், திரு.வி.க, பாரதிதாசன் போன்ற பகுத்தறிவு பகலவர்களாக ஓரளவு கைம்பெண் நிலை மாறியுள்ளது.

**துணை நூற்பட்டியல்**


1. இறையரசன், பா., தமிழர் நாகரிக வரலாறு, பூம்புகார் பதிப்பகம், சென்னை, முதற் பதிப்பு 1993
2. கிருஷ்ணன், முனைவர் வ., https://iniyavaikatral.in
3. சங்க இலக்கியம், TVA_BOK_0025487_சங்க_இலக்கியம்.pdf
4. பாரதிதாசன் கவிதைகள், https://www.tamilvu.org/ta/library-l9210-html-l92100in-146402